بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 13/10/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

✪ பத்ர் போர் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் வரலாற்றுச் சம்பவங்கள் குறித்த ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்
✪ மத்திய கிழக்கில் உருவாகியுள்ள போர் சூழலைக் கருத்தில் கொண்டு சிறப்பு துஆக்களின் பக்கம் கவனமூட்டல்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

பத்ர் போரின் போதும், பத்ர் போரை விட்டு திரும்பி வரும்போதும் நிகழ்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில வாழ்க்கைச் சம்பவங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டு வந்தது. அவற்றில், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் திருமணம் செய்த குறிப்பும் உள்ளது. ஆகவே, அதை நான் இங்கு எடுத்துக் கூறி விடுகிறேன்.

உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் மரணத்திற்குப்பிறகு ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் (ரலி) அவர்களின் மனைவி கவ்லா பின்த் ஹக்கீம் அவர்கள் ஒருநாள் பெருமானார் (ஸல்) அவர்களின் முன் ஆஜராகி, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் திருமண செய்ய விரும்பவில்லையா என்று கேட்டார்கள். யாருடன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். தாங்கள் விரும்பினால் கன்னிப்பெண்ணும் இருக்கிறாள்; விதவையும் இருக்கிறாள் என்று கவ்லா கூறினார்கள். (அவர்கள்) யாரென்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டபோது, கன்னிப்பெண் என்பது அபூபக்ர் (ரலி) அவர்களின் மகள் ஆயிஷா ஆவார்கள். விதவை என்பது ஸம்ஆ அவர்களின் மகள் சவ்தா ஆவார்கள் என்று கவ்லா கூறினார்கள். இந்த இரு வீட்டாரிடமும் என் சம்பந்தமாக பேசச் செல்லுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் திருமண வரன் தொடர்பாக பேசுவதற்காக முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் வீட்டுக்குச் சென்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் சம்மதத்திற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் நி(க்)காஹ் செய்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உம்மை நி(க்)காஹ் செய்வதற்கு முன் இருமுறை நீர் கனவில் காட்டப்பட்டீர் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் திருமணத்திற்குப் பிறகு என்னிடம் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்குத் திருமணம் ஆன போது அவர்களின் வயது குறைவைக் குறித்து முனாஃபிக்களும், தீயவர்களும் எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை. அவர்களின் வயதைக் குறித்து ஏதேனும் விஷயம் இருந்திருந்தால் இவர்கள் நிச்சயமாக ஆட்சேபனைகளின் மழையைப் பொழிந்திருப்பார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** திருமணத்தின் போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒன்பது வயதுடையவர்களாக இருந்தார்கள் என்பது அடிப்படையற்ற விஷயமாகும்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சிறப்பம்சங்கள் பற்றி எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** சிறுவயதுடையவராக இருந்தபோதிலும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சிந்தனையும் மனனத் திறமையும் அபாரமானதாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் தஃலீம் மற்றும் தர்பிய்யத்தின் கீழ் அவர்கள் மிகவும் விரைவாக வியத்தகு முறையில் முன்னேறினார்கள். சிறுவயதில் அவர்களைப் பெருமானார் (ஸல்) அவர்கள் தம் வீட்டிற்கு அழைத்து வந்ததன் உண்மையான நோக்கம், ஆரம்பம் முதலேயே பெருமானார் (ஸல்) அவர்கள் தம் விருப்பத்திற்கேற்ப அவர்களுக்குத் தர்பிய்யத் கொடுக்க வேண்டும் என்பதும், பெருமானார் (ஸல்) அவர்களுடன் நீண்ட காலம் இருக்கும் வாய்ப்பு பெற வேண்டும் என்பதுமாகும். ஷரீஅத்தையுடைய ஒரு நபியின் மனைவி மீது சுமத்தப்படும் நுட்பமான, மாபெரும் பணிக்கு அவர்களைத் தகுதியுடையவராக ஆக்க வேண்டும் என்பதும் ஆகும். ஆகவே, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் முஸ்லிம் பெண்களின் கல்வி, தர்பிய்யத் ஆகியவற்றில் எவ்வாறான பணியை செய்து முடித்தார்கள் என்றால், அதற்கு இணையான ஒன்றை உலக வரலாற்றில் காண முடியாது. பெருமானார் (ஸல்) அவர்களின் ஹதீஸுகளின் ஒரு பெரும், முக்கிய பகுதி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பைக் கொண்டதாக உள்ளது. அன்னாரால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் எண்ணிக்கை 2210 வரை சென்றடைகிறது. அன்னாருடைய இஸ்லாமிய சட்ட அறிவு எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், பெரும் பெரும் சஹாபிகளும் அன்னாரிடம் தொடர்பு கொள்வார்கள்.

**பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:** "பெண்களுள் முழுமையானவர்கள் மிகக் குறைவாகவே இருந்துள்ளார்கள்." பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஃபிர்அவ்னின் மனைவி ஆசியா, இம்ரானின் மகள் மர்யம் ஆகியோரைக் குறிப்பிட்டுவிட்டு அரேபியாவில் மிகச் சிறந்த உணவான ஸரீதுக்கு பிற உணவுகளின் மீது எவ்வாறு மேன்மை உள்ளதோ அதேபோன்று ஆயிஷாவுக்குப் பெண்களின் மீது மேன்மை உள்ளது என்றார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஏறக்குறைய 48 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்கள். ஹிஜ்ரீ 58 ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில் தம் உண்மை நேசனாகிய இறைவனை சந்தித்தார்கள். அப்போது அவர்களின் வயது 68 ஆகும்.

பத்ர் கைதிகளில் பெருமானார் (ஸல்) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஸய்னப் (ரலி) அவர்களின் கணவர் அபுல் ஆஸ் பின் ரபீஃ அவர்களும் இருந்தார்கள். அவர்களை விடுவிப்பதற்காக ஹஸ்ரத் ஸய்னப் (ரலி) அவர்கள் தம் திருமணத்தின்பொது தமது தாயார் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் தமக்கு வழங்கிய செயினை மக்காவில் இருந்து கொடுத்தனுப்பினார்கள். பெருமானார்

(ஸல்) அவர்கள் அந்தச் செயினைப் பார்த்தபோது மிகவும் துக்கமடைந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தம் சஹாபிகளிடம், நீங்கள் பொருத்தமானதாகக் கருதினால் ஸய்னபின் கைதியை விடுவித்து விடுங்கள்; அவளுடைய இந்தச் செயினையும் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். நிச்சயமாக அவ்வாறே செய்கிறோம் என்று சஹாபிகள் கூறினர். அபுல் ஆஸ் அவர்கள் மக்கா சென்றடைந்தவுடன் அவர்களின் மனைவி ஸய்னப் அவர்களுக்கு மதீனா ஹிஜ்ரத் செய்வதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை விடுதலை செய்தார்கள். அபுல் ஆஸ் அவர்கள் மக்கா சென்றடைந்தவுடன் ஹிஜ்ரத் செய்வதற்கு ஸய்னப் அவர்களுக்கு அனுமதி வழங்கி விட்டார்கள். கொஞ்ச காலத்திற்குப் பிறகு அபுல் ஆஸ் அவர்களும் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்து விட்டார்கள். இவ்வாறு கணவரும் மனைவியும் மீண்டும் ஒன்று சேர்ந்து விட்டார்கள்.

**தற்காலத்தில் உலகில் நிலவும் சூழ்நிலை தொடர்பாக இப்போது நான் துஆவுக்காகவும் கூறிக்கொள்கிறேன்.** இந்தப் போரின் காரணமாக இருபுறம் உள்ள குடிமக்களான பெண்கள், குழந்தைகள், வயோதிகர்கள் ஆகியோர் பாகுபாடின்றி கொல்லப்பட்டு வருகின்றனர்; அல்லது கொல்லப்பட்டு விட்டனர்.

**போர் நிலையிலும் கூட பெண்கள், குழந்தைகள் மற்றும் எவ்விதத்திலும் போரில் பங்கு பெறாதவர்களைக் கொல்வதற்கு இஸ்லாம் அனுமதி அளிக்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் இதைக் கடுமையாக வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.** இஸ்ரேல் படை இதற்கு முன் எத்தனையோ அப்பாவி பாலஸ்தீனர்களைக் கொன்றிருக்கிறார்கள் என்ற போதிலும் அது புறக்கணிக்கப்பட்டு, ஹமாஸ்தான் போரை ஆரம்பிப்பத்தில் முதல் அடியை எடுத்து வைத்தார்கள் என்று இப்போது உலகம் கூறுகிறது; இதில் உண்மை நிலையும் ஓரளவுக்கு இவ்வாறுதான் உள்ளது. **எவ்வாறிருப்பினும் முஸ்லிம்கள் இஸ்லாமிய போதனைக்கேற்ப செயல்பட வேண்டும்.** இஸ்ரேல் படை செய்தது என்றால் அது அவர்களின் செயல்! அதன் எதிர் நடவடிக்கைக்கு வேறு வழிமுறைகள் இருந்திருக்கலாம்! நியாயமான சண்டை என்றால் இராணுவத்துடன் சண்டையிட வேண்டும். பெண்கள், குழந்தைகள், தீங்கு விளைவிக்காதவர்களுடன் போர் செய்யக் கூடாது!

இந்த வகையில் ஹமாஸ் எடுத்து வைத்த அடி தவறானதாக இருந்தது. அதனால் பாதிப்பு அதிகம்; பயன் குறைவு. ஹமாஸ் செய்ததற்கு பதிலடி ஹமாஸ் வரைக்கும் மட்டுமே இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் இப்போது இஸ்ரேலிய அரசு செய்து கொண்டிருப்பது மிகவும் கொடூரமான செயலாகும். இந்தத் தொடர் இப்போது நிற்பதாக தெரியவில்லை. நாங்கள் காஸாவை முற்றிலும் அழித்து விடுவோம் என்று இஸ்ரேலிய அரசு இப்போது அறிவித்துள்ளது. அதற்காக அவர்கள் எண்ணற்ற அளவில் குண்டு மழை பொழிந்துள்ளனர். முழு நகரையும் சாம்பல் குவியலாக ஆக்கியுள்ளனர். இப்போது உருவாகியுள்ள புதிய சூழ்நிலை என்னவென்றால், ஒரு மில்லியனை விடவும் அதிகமான மக்கள் காஸாவை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது மனித உரிமை மீறல்; இது தவறாகும் என்று ஐ.நா சார்பாக மிக மெல்லிய குரலில் இதற்கு கண்டன குரல் எழுப்பப்பட்டுள்ளது. இந்த அளவுக்காவது குரல் எழுப்பினார்களே அதற்கு நன்றி! இது தவறாகும் என்று வன்மையாக கண்டிப்பதற்கு பதிலாக இப்போதும் கோரிக்கைதான் வைக்கப்படுகிறது.

எவ்வாறிருப்பினும், போர் செய்யாத அப்பாவி குடிமக்கள் எந்த குற்றமும் அற்றவர்கள் ஆவர். இஸ்ரேலின் பெண்களையும் குழந்தைகளையும் உலகம் அப்பாவிகள் என்று கருதுகிறார்கள் என்றால், பாலஸ்தீனத்து பெண்களும் குழந்தைகளும் அப்பாவிகள்தான். இவ்வாறு கொலை குற்றங்கள் செய்வது ஆகுமானதல்ல என்று இந்த வேதம் கொடுக்கப்பட்டோரின் போதனையும் கூட இதைத்தான் கூறுகிறது. முஸ்லிம்கள் தவறிழைத்துள்ளார்கள் என்று பழி சுமத்துகிறார்கள் என்றால், அவர்கள் தம் நிலையையும் சீர்தூக்கி பார்க்க வேண்டும்.

**எவ்வாறிருப்பினும், நமக்கு அதிக துஆக்களின் தேவை உள்ளது.** பாலஸ்தீனத்து தூதுவர் இங்கு கூறியது என்னவென்றால், 'ஹமாஸ் ஒரு போராளி குழு ஆகும்; அது அரசு அல்ல!' உண்மையான நீதி நிலைநாட்டப்பட்டிருந்தால் இவ்விஷயங்கள் நடந்திருக்கவே செய்யாது. பெரும் சக்திகள் தம் இரட்டை நிலைப்பாட்டை கொண்டிருக்கவில்லை என்றால் இதுபோன்ற அமைதியின்மையும் போர்களும் உலகில் நிகழவே செய்யாது என்று அத்துடன் அவர் எழுப்பிய கேள்வியும் சரியானதே! இதே விஷயத்தைதான் இஸ்லாமிய போதனையின் ஒளியில் ஒரு நீண்ட காலமாக நான் கூறி வருகிறேன். 'நீங்கள் கூறுவது சரிதான்! சரிதான்!' என்று முன்னால் கூறுகிறார்கள். ஆனால் செயல்படுவதற்கு ஆயத்தமாவதில்லை. பெரும் மேற்கத்திய சக்திகள் அனைத்தும் இப்போது நீதியை ஒருபுறம் வைத்துவிட்டு பாலஸ்தீனர்கள் மீது கடுமை காட்ட ஒன்று சேருகின்றன. எல்லாப்புறமிருந்தும் படைகளை அனுப்ப பேச்சுவார்த்தை நடக்கிறது. மீடியாவில் தவறான அறிக்கைகள் கூறப்படுகின்றன. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற ரீதியில் இவர்கள் செயல்படுகிறார்கள். யாருடைய கைகளில் உலகின் வாழ்வாதாரம் உள்ளதோ அவர்களுக்கு முன்னால்தானே இவர்கள் குனிகிறார்கள். ஆய்வு செய்து பார்க்கும்போது, பெரும் சக்திகள் போரைத் தணிப்பதற்கு பதிலாக அதைத் தூண்டி விடுவதில் மும்முரமாக ஈடுபடுவது தெரிய வருகிறது. இவர்கள் போரை முடிவுக்கு கொண்டு வர விரும்பவில்லை.

போர்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகத்தான் முதல் உலகப்போருக்குப் பின் 'உலக நாடுகள் சங்கம்' உருவாக்கப்பட்டது. ஆனால் நீதி நிலைநாட்டப்படாததன் காரணமாக அது தோல்வியுற்றது. பிறகு இரண்டாம் உலகப்போர் நடந்தது. அதில் 7 கோடிக்கும் அதிகமான மக்கள் தம் உயிர்களை இழந்தனர். பிறகு ஐநா அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது அதன் நிலையும் இவ்வாறு தான் உள்ளது! அதுவும் மோசமான முறையில் தோல்வி அடைந்து வருகிறது. உலகில் நீதி நிலைநாட்டப்படும்; ஒடுக்கப்பட்டவர்கள் ஆதரிக்கப்படுவார்கள்; போர்களை முடிவுக்கு கொண்டு வர முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதற்காகத்தான் அது உருவாக்கப்பட்டது. ஆனால் இவ்விஷயங்களுடன் அதற்குக் கொஞ்சம் கூட தொடர்பு இல்லை. ஒவ்வொருவரும் தன் இலாபத்தையே நாடுகிறார். இப்பொழுது நீதியின்மையின் காரணமாக போர் நிகழும் என்றால், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பை ஒரு சாதாரண மனிதரால் அனுமானிக்கக் கூட இயலாது.

இவ்வாறான சூழ்நிலையில் முஸ்லிம் நாடுகள் குறைந்தபட்சம் சுய அறிவோடு செயல்பட வேண்டும். தம் கருத்து வேறுபாடுகளை களைந்து, ஒற்றுமையை நிலை நாட்டுங்கள். உலகில் இருந்து குழப்பத்தை அகற்றுவதற்கான வழிமுறையாக இதுதான் இருக்க முடியும். ஒன்று சேர்ந்து, நீதியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக, அநீதிக்குள்ளானவர்களின் உரிமைகளை எல்லா

இடங்களிலும் நிலை நாட்டுவதற்காக முழுமையான முறையில் குரல் கொடுங்கள். ஒன்றாக இருப்பீர்கள் என்றால், ஒற்றுமை இருக்கும் என்றால் குரலிலும் வலிமை இருக்கும். இல்லையென்றால், அப்பாவி முஸ்லிம்களின் உயிர்கள் வீணாவதற்கு இவர்கள் பொறுப்பாளிகளாக இருப்பார்கள்; இந்த முஸ்லிம் அரசுகள் பொறுப்பாளிகளாக இருக்கும்.

**அநீதி இழைப்பவர், அநீதிக்கு ஆளானவர் - இருவருக்கும் உதவி செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய வழிகாட்டலை முஸ்லிம் சக்திகள் எப்போது முன்னால் வைக்க வேண்டும்.** முஸ்லிம் அரசுகளுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக! அவர்கள் ஒன்றிணைந்து, நீதியை நிலை நாட்டக் கூடியவர்களாக ஆவார்களாக. உலக சக்திகளுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக! அவர்கள் உலகை, போரில் தள்ளாமல் அழிவிலிருந்தும், நாசத்தில் இருந்தும் காப்பாற்ற முயற்சிக்க வேண்டும். அழிவு ஏற்படும் என்றால், இந்தப் பெரும் சக்திகளும் பாதுகாப்பாக இருக்காது என்பதை அவர்கள் நினைவில் வைக்க வேண்டும்.

**நம்மிடத்தில் துஆ எனும் ஆயுதம் உள்ளது. ஆகவே ஒவ்வோர் அஹ்மதியும் முன்பை விட அதிகமாக இது தொடர்பாக துஆ செய்ய வேண்டும். காஸாவில் சில அஹ்மதி வீடுகளும் சூழப்பட்டுள்ளன. அவர்களையும் அல்லாஹ் பாதுகாப்பானாக! எல்லா அப்பாவிகளையும் பாதுகாப்பானாக!**

ஹமாஸுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக! இவர்கள் தம் மக்கள் மீதே அநீதி இழைத்ததற்கான பொறுப்பாளிகளாக ஆகாமல் இருப்பார்களாக. 'எந்த ஒரு சமுதாயத்தின் பகைமையும் நீதியை விட்டு விலகச் செய்யாமல் இருக்க வேண்டும்' என்பதே திருக்குர்ஆனுடைய கட்டளையாகும். பெரும் சக்திகளுக்கும் அல்லாஹ் நல்வாய்ப்பை வழங்குவானாக! அவர்கள் நீதியின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்தவாறு, அமைதியை நிலை நாட்டக் கூடியவர்களாக ஆவார்களாக! உலகில் அமைதி மற்றும் மகிழ்ச்சியைக் காணக் கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. ஆமீன்!

***குத்பாவின் இறுதி பகுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் UK வைச் சார்ந்த மதிப்பிற்குரிய, டாக்டர் பஷீர் அஹ்மத் கான் சாஹிப் மற்றும் பாகிஸ்தானைச் சார்ந்த டாக்டர் ஷஃபீக் அஹ்மத் செஹ்கல் சாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய வஸீமா பேகம் சாஹிபா ஆகிய இரு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு ஜனாஸா தொழ வைப்பதாக அறிவித்தார்கள். மர்ஹூம்களின் பாவ மன்னிப்பு மற்றும் அந்தஸ்து உயர்வுக்காக துஆ செய்தார்கள்.***

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**